# திருவண்ணாமலை நகராட்சி
## சாதாரணக் கூட்டம்

**07.06.2021ம் தேதி திங்கட் கிழமை மாலை 5.00 மணிக்கு திருவண்ணாமலை நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நடைபெற்ற சாதாரணக் கூட்டப் பொருள் விபரம்.**

<table>
<tr><th>பொருள் எண்.</th><th>பொருள் விபரம்</th><th>குறிப்பு</th></tr>
<tr><td>1</td><td>திருவண்ணாமலை நகரம், வார்டு – 4, பிளாக் – 33, நகரளவு எண். 1830 – 3.16 ஏக்கர் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு (மனை எண்.1 முதல் 79 வரை) ஒப்புதல் வழங்க உத்தேச சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்புக்காகவும் மற்றும் மனைப்பிரிவு 01 முதல் 79 மனைகள் மாவட்ட நகர்ஊரமைப்பு அலுவலகம், திருவண்ணாமலை அவர்களின் கடிதம் ந.க.எண்.815/2020/தி.மலை நாள் 22.03.2021ல் ம.வ./ந.ஊ.இ. எண்.25/21 தொழில்நுட்ப அனுமதி வரைபடம் மற்றும் நிபந்தனைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு :<br>1. மனைப்பிரிவு பதிவு செய்யலாம்.<br>2. மனைப்பிரிவில் அமையப்பெற்றுள்ள சாலைகள், கால்வாய்கள், கல்வெட், குடிநீர் பகிர்மானக் குழாய்கள், தெருவிளக்குகள் மற்றும் அதற்குண்டான விளக்கு வசதி போன்றவைகள் சம்மந்தப்பட்ட மனைப்பிரிவு உரிமையாளர்கள் திரு.ஜெயக்குமார் மற்றும் இருவர் அவர்களால் ஏற்படுத்தப்படுள்ளது. மேலும், நகராட்சி பொறியாளர் அவர்களின் மேற்பார்வையில் சாலைகள், கால்வாய், குடிநீர் பகிர்மானக் குழாய், தெருவிளக்கு போன்றவை அமைக்கப்பட்டுள்ளது.<br><table><tr><th>வ.எண்</th><th>விவரம்</th><th>தொகை ரூ.</th></tr><tr><td>1</td><td>கூராய்வு கட்டணம்</td><td>1,000</td></tr><tr><td>2</td><td>மனைப்பதிவு விண்ணப்ப ஆய்வு கட்டணம்</td><td>30,000</td></tr><tr><td>3</td><td>கட்டிடம் கட்டுவதற்கு நிலங்களை பிரிக்க அனுமதி கட்டணம்</td><td>30,000</td></tr><tr><td>4</td><td>மனை உட்பிரிவு கட்டணம்</td><td>39,500</td></tr><tr><td>5</td><td>புதியதாக தெருக்கள் உருவாக்குவதற்கான கட்டணம்</td><td>14,000</td></tr><tr><td></td><td>மொத்தம்</td><td>1,14,500</td></tr></table>ரூ.1,14,500/- நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.</td><td>தீர்மானம் எண். 172 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | 3. மேற்படி மனைப் பிரிவில் அமையும் தெருக்கள் மற்றும் பூங்கா இடங்கள் அனைத்தும் இந்நகர்மன்ற தீர்மான எண்.67 நாள் 19.02.2021ல் மனைப்பிரிவில் அமையும் சாலைகள், பூங்கா, மேல்நிலை தொட்டிக்கான இடம், மின்மாற்றிக்காக ஒதுக்கப்பட்ட இடம் போன்றவை பத்திரப்பதிவு ஆவண எண்.403/2021 நாள் 03.02.2021 இல் தானபத்திரம் நகராட்சி ஆணையாளரின் பெயரில் தானமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.<br><br>4. மனைப்பிரிவு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் சம்மந்தப்பட்ட மனைப்பிரிவு உரிமையாளர்களால் செய்து தரப்பட்டுள்ளது. மேலும், மின்கம்பம் அமைக்க ரூ.3,21,910/– நாள் 26.02.2021 அன்று மின்வாரியத்திலும் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், பூங்காவிற்கு முள் கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளது.<br><br>5. மேற்படி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17255/2020/TCP-8 நாள் 09.02.2021ல் தெரிவித்துள்ள மனைப்பிரிவு நிபந்தனை 19(இ)(2)ன்படி வட்டாட்சியரின் சான்று பெறப்பட்டுள்ளதாலும், நிர்வாக அதிகாரி மனநிறைவு அடைந்துள்ளதாலும், மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கலாம்.<br>(ந.க.எண்.0130 / 2021 / எப்1) | |
| **2** | அம்மா இரு சக்கர வாகனம் திட்டம் 2019 – 2020 மற்றும் 2020 – 2021 ஆம் ஆண்டிற்கு வேலைக்கு செல்லும் மகளிர் எளிதில் வேலை செய்யும் இடத்திற்கு சென்றுவர பயனாளிகள் பரிந்துரை தேர்வு செய்த உத்தரவு நகல் 1500 அச்சடித்து வழங்க திருவண்ணாமலை மாவட்ட எழுது பொருட்கள் அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம், திருவண்ணாமலையில் அச்சடித்து வழங்கியமைக்கு செலவினம் ரூ.17,625/–ய் வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.287 / 2014 / சி4) | **தீர்மானம் எண். 173 அனுமதிக்கப்பட்டது.** |
| **3** | இந்நகராட்சி எல்லைக்குப்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தொற்று இரண்டாவது அலை பரவுவதை தடுக்கும் நடவடிக்கையின் பொருட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் அறிவுரைகளின்படி மக்கள் அதிகம் கூடும் இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நாள்தோறும் நடத்திட 120 எண்ணிக்கையில் நாற்கலிகள் மற்றும் 12 எண்ணிக்கையில் மேசைகள் புதியதாக நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் வாங்கி பணிகள் மேற்கொண்டதற்கு செலவினம் ரூ.1,06,200/– வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மானம் எண். 174 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :**<br>1. அனுமதி வழங்கலாம்<br>2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்<br>3. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணிகள் மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1343 / 2020 / எச்1) | |
| **4** | இந்நகராட்சி எல்லைக்குப்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தொற்று இரண்டாவது அலை பரவுவதை தடுக்கும் நடவடிக்கையின் பொருட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் அறிவுரைகளின்படி மக்கள் அதிகம் கூடும் இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நாள்தோறும் நடத்திட 12 எண்ணிக்கையில் நிழல் அமைப்புடன் கூடிய பந்தல் புதியதாக நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் வாங்கி பணிகள் மேற்கொண்டதற்கு செலவினம் ரூ. 76,272/– வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>1. அனுமதி வழங்கலாம்<br>2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்<br>3. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணிகள் மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1343 / 2020 / எச்1) | **தீர்மானம் எண். 175 அனுமதிக்கப்பட்டது.** |
| **5** | கொரோனா நோய் தொற்று இரண்டாவது அலை வேகமாக பரவி வருவதால் பொது மக்களை பாதுகாக்க, நகராட்சி மூலம் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் கொரோனா நோய் தொற்றினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர, பணிபுரியும் பணியாளர்கள் பாதுகாப்பாக பணிபுரிய ஏதுவாக, N95 முகவுறை 1000 எண்ணிக்கை சப்ளை செய்ய தோராய செலவினம் ரூ.57,000/–க்கு (ரூபாய் ஐம்பத்தி ஏழாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. கொரோனா நோய் தொற்று அதிகம் பரவி வருவதால் விரைந்து பணி மேற்கொள்ள ஏதுவாக விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளலாம்.<br>3. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி மற்றும் திடக்கழிவு மேலாண்மை பயனர் கட்டண நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.எச்1/1343/2020) | **தீர்மானம் எண். 176 அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr><td></td><td></td><td></td></tr>
<tr><td>6</td><td>இந்நகராட்சியின் கொரோனா நோய் தொற்றினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர, பணிபுரியும் பணியாளர்கள் பாதுகாப்பாக பணிபுரிய ஏதுவாக, N95 முகவுறை 1000 எண்ணிக்கை சப்ளை செய்யும் பணிக்கு 04.05.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விவரம் வருமாறு:
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ.)</th><th>கொடுத்துள்ள விலைப்புள்ளி GST உட்பட (ஒன்றுக்கு)</th></tr>
<tr><td>1</td><td>Tirupattur Agro Engineering & Service, Co-op. Centre Ltd. V.G.14, Tirupattur</td><td rowspan="3">57,000</td><td>ரூ.56.64/–</td></tr>
<tr><td>2</td><td>Sudarsan Biochem, Tirupattur</td><td>ரூ.57.82/–</td></tr>
<tr><td>3</td><td>Thimmaraya Enterprises, Chennai</td><td>ரூ.59.00/–</td></tr>
</table>
<br>
அலுவலகக்குறிப்பு :<br>
1. குறைந்த விலைப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள Tirupattur Agro Engineering & Service, Co-op. Centre Ltd. V.G.14, Tirupattur என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>
கோப்பு எண்.எச்1/1343/2020</td><td>தீர்மானம் எண். 177 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>7</td><td>கொரோனா நோய் தொற்று இரண்டாவது அலை வேகமாக பரவி வருவதால் பொது மக்களை பாதுகாக்க, நகராட்சி மூலம் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் கொரோனா நோய் தொற்றினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர, இந்நகரின் கொரோனா நோய் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு மண்டலப்பகுதியில் “தடை செய்யப்பட்ட பகுதி” என அறிவிப்பை எளிதில் மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் சுவரொட்டி 500 எண்ணிக்கையில் அச்சிட்டு சப்ளை செய்ய தோராய செலவினம் ரூ.15,000/–க்கு (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. கொரோனா நோய் தொற்று அதிகம் பரவி வருவதால் விரைந்து பணி மேற்கொள்ள ஏதுவாக விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளலாம்.</td><td>தீர்மானம் எண். 178 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>3. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி மற்றும் திடக்கழிவு மேலாண்மை பயனர் கட்டண நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.எச்1/1343/2020</td><td></td></tr>
<tr><td>8</td><td>இந்நகரின் கொரோனா நோய் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு மண்டலப்பகுதியில் ‘‘தடை செய்யப்பட்ட பகுதி’’ என அறிவிப்பை எளிதில் மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் சுவரொட்டி 500 எண்ணிக்கையில் அச்சிட்டு சப்ளை செய்யும் பணிக்கு 04.05.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விவரம் வருமாறு:
<table>
<tr><th>வ.எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சம்)</th><th>கொடுத்துள்ள விலைப்புள்ளி</th></tr>
<tr><td>1</td><td>திருவண்ணாமலை மாவட்ட எழுது பொருள் மற்றும் அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., திருவண்ணாமலை.</td><td rowspan="3">0.15</td><td>ரூ.14375.00/–</td></tr>
<tr><td>2</td><td>ஸ்ரீ சரவணா பிரண்டர்ஸ்<br>23, உண்ணாமலை அம்மன் நிலையம் திருவண்ணாமலை.</td><td>ரூ.14500.00/–</td></tr>
<tr><td>3</td><td>நியூ சக்தி ஆப்செட் பிரிண்டர்ஸ் திருவண்ணாமலை.</td><td>ரூ.14750.00/–</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>1. குறைந்த விலைப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள திருவண்ணாமலை மாவட்ட எழுது பொருள் மற்றும் அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., திருவண்ணாமலை என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>கோப்பு எண்.எச்1/1343/2020</td><td>தீர்மானம் எண். 179 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>9</td><td>கொரோனா நோய் தொற்று இரண்டாவது அலை வேகமாக பரவி வருவதால் பொது மக்களை பாதுகாக்க, நகராட்சி மூலம் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் கொரோனா நோய் தொற்றினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர, இந்நகரில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் 35000 எண்ணிக்கையில் அச்சிட்டு சப்ளை செய்ய தோராய செலவினம்</td><td>தீர்மானம் எண். 180 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>ரூ.97,000/—க்கு (ரூபாய் தொண்ணுற்று ஏழாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. கொரோனா நோய் தொற்று அதிகம் பரவி வருவதால் விரைந்து பணி மேற்கொள்ள ஏதுவாக விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளலாம்.<br>3. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி மற்றும் திடக்கழிவு மேலாண்மை பயனர் கட்டண நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.எச்1/1343/2020</td>
<td></td>
</tr>
<tr>
<td>10</td>
<td>இந்நகராட்சியின் கொரோனா நோய் தொற்றினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர, இந்நகரில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் 35000 எண்ணிக்கையில் அச்சிட்டு சப்ளை செய்யும் பணிக்கு 04.05.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விவரம் வருமாறு:
<table>
<tr><th>வ.எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சம்)</th><th>கொடுத்துள்ள விலைப்புள்ளி</th></tr>
<tr><td>1</td><td>திருவண்ணாமலை மாவட்ட எழுது பொருள் மற்றும் அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., திருவண்ணாமலை.</td><td rowspan="3">0.97</td><td>ரூ.96750.00/—</td></tr>
<tr><td>2</td><td>ஸ்ரீ சரவணா பிரண்டர்ஸ்<br>23, உண்ணாமலை அம்மன் நிலையம்<br>திருவண்ணாமலை.</td><td>ரூ.97500.00/—</td></tr>
<tr><td>3</td><td>நியூ சக்தி ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>திருவண்ணாமலை.</td><td>ரூ.97600.00/—</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>1. குறைந்த விலைப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள திருவண்ணாமலை மாவட்ட எழுது பொருள் மற்றும் அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., திருவண்ணாமலை என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>கோப்பு எண்.எச்1/1343/2020</td>
<td>தீர்மானம் எண். 181 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 11 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் முடிதிருத்தம் / அழகு நிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் நடத்துபவர்கள், திருவண்ணாமலை நகராட்சியில் உரிமம் செய்வது தொடர்பான விளம்பரம் செய்தி தமிழ் மற்றும் ஆங்கிலம் தினகரன் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ.5,443/–யை Adwave Advertising Private Limited, Chennai அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4111 / 2021 / எச்2) | **தீர்மானம் எண். 182 அனுமதிக்கப்பட்டது.** |
| 12 | திருவண்ணாமலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு பயன்படுத்தும் கீழ்கண்ட வாகனங்களுக்கு தகுதிச் சான்று பெறவேண்டி உள்ளதால் பழுது நீக்கம் செய்ய தோராய செலவின விவரம் | **தீர்மானம் எண். 183 அனுமதிக்கப்பட்டது.** |

| வ.எண் | வாகன பதிவு எண் | வாகன வகை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | TN 25AQ 6679 | Dumber Placer | 50,000.00 |
| 2 | TN 25AQ 6801 | Dumber Placer | 50,000.00 |
| 3 | TN 25AQ 8436 | Compactor | 50,000.00 |
| 4 | TN 25AQ 8356 | Compactor | 50,000.00 |
| 5 | TN 25AQ 8428 | Compactor | 50,000.00 |
| 6 | TN 25AQ 8410 | Compactor | 50,000.00 |
| 7 | TN 25AQ 8366 | Compactor | 50,000.00 |
| 8 | TN 25AQ 8413 | Compactor | 50,000.00 |
| 9 | TN 25AQ 8425 | Compactor | 50,000.00 |
| 10 | TN 25AD 9876 | Tipper Lorry | 50,000.00 |
| 11 | TN 25AE 4619 | Tipper Lorry | 50,000.00 |
| 12 | TN 25K 1240 | Tipper Lorry | 50,000.00 |
| 13 | TN 25AE 0685 | Tipper Lorry | 50,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 14 | TN 25BL 2028 | JCB | 50,000.00 |
| 15 | TN 25BJ 2449 | JCB | 50,000.00 |
| 16 | TN 25BJ 4149 | Tata Ace | 30,000.00 |
| 17 | TN 25BJ 4104 | Tata Ace | 30,000.00 |
| 18 | TN 25BJ 4145 | Tata Ace | 30,000.00 |
| 19 | TN 25BJ 4137 | Tata Ace | 30,000.00 |
| 20 | TN 25BJ 4102 | Tata Ace | 30,000.00 |
| 21 | TN 25BA 0187 | Broomer | 50,000.00 |

**அலுவலகக் குறிப்பு :**

1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்ற முன் அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி வாகனங்களுக்கு தகுதி சான்று பெற ஆகும் செலவினம் ரூ.9,50,000.00 மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.5115 / 2019 / எச்1)

**13**

திருவண்ணாமலை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோவிட் இரண்டாம் அலையில் தொற்று அதிகம் ஏற்படாத வகையில் அரசு வழிகாட்டுதலில் தெரிவித்துள்ளபடி, பொதுமக்களுக்கான விழிப்புணர்வு விளம்பர பேனர்கள், பேருந்து நிலையத்தில் உள்ள பொத கழிவறைகளில் போடப்படும் விளம்பர பேனர்கள், மருத்துவ முகாம்கள் தொடர்பான பேனர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அவ்வப்போது தெரிவிக்கும் பேனர்கள் அச்சடித்து வழங்குவதற்கும், விளம்பர பேனர் அமைப்பதற்கும் விலைப்புள்ளிகள் கோரியத்தில் 17.05.2021 அன்று வரப்பெற்ற கீக்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No. | Name of the Printing Press | Digital Banner Designing, Printing (per sqft.) | Angel and fixing per banner (10 day rent) |
|---|---|---|---|
| 1 | Vetri Digital signs 14/4.Durgai amman kovil street, Thiruvannamalai. | Rs.12/- | Rs.2000/- |
| 2 | DINESH Digital & Cards 1541.Thenral Nagar, | Rs.14/- | Rs.3000/- |

**தீர்மானம் எண். 184 அனுமதிக்கப்பட்டது.**

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>Vengikkal, Tiruvannamalai</td><td></td><td></td></tr>
<tr><td>3</td><td>Supper Digital<br>42. Chinnakadai Street,<br>Thiruvannamalai.</td><td>Rs.15/-</td><td>Rs.3300/-</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு :<br>
1. மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள விலைப்புள்ளியினை ஏற்கலாம். கொரோனா தடுப்பு பணி அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை ஏற்கலாம்.<br>
2. தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் செலவினம் மேற்கொள்ளலாம்.<br>
(ந.க.எண்.1343 / 2020 / எச்1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>14</td>
<td>
சிறப்பு நிலை நகராட்சியான திருவண்ணாமலை நகராட்சி நிலைக்கேற்ப போதுமான தூய்மைப் பணியாளர்கள் அரசாணை எண்.19 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ME-1) நாள் 18.01.2007ன் படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை நகராட்சிக்குட்பட்ட 39 வார்டுகளிலும் சேகரமாகும் குப்பைகளை அகற்றிட மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை அவர்களின் ஊதிய விகிதத்தில் 301 தினக்கூலி தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து பணி மேற்கொள்ள அனுமதி கோரியதில், நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் K.Dis.No.3253/P3/2017 நாள் 24.03.2017 செயல்முறை ஆணையில் மூன்றாண்டுகளுக்கு பணி மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.<br><br>
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவிற்கிணங்க இந்நகராட்சி தூய்மைப்பணி மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கிரீன் வாரியர், திருவள்ளூர், சென்னை என்ற நிறவனத்திற்கு 15.05.2018 முதல் பணி மேற்கொள்ள உத்தரவிடப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் பணி நீட்டிப்பு செய்யப்பட்டு அந்நிறுவனத்தின் பணிக்காலம் 14.06.2021 உடன் முடிவடைகிறது.<br><br>
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவின்படி ஒப்பந்த அடிப்படையிலான பணிக்காலம் மூன்றாண்டுகள் நிறைவடைவதால் புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், 301 தினக்கூலி தற்காலிக பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து பணி மேற்கொள்ளவும் அதற்கான ஓராண்டிற்கான செலவினம் ரூ.590.20 லட்சத்திற்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.
</td>
<td>தீர்மானம் எண். 185 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **அலுவலகக்குறிப்பு :**<br>1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி கருத்துரு அனுப்பிவைக்கலாம்.<br>2. திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியில் பணியினை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண்.1661/2021/எச்1) | |
| **15** | சிறப்பு நிலை நகராட்சியான திருவண்ணாமலை நகராட்சி நிலைக்கேற்ப போதுமான தூய்மைப் பணியாளர்கள் அரசாணை எண்.19 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை **(ME-1)** நாள் 18.01.2007ன் படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை நகராட்சிக்குட்பட்ட 39 வார்டுகளிலும் சேகரமாகும் குப்பைகளை அகற்றிட மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை அவர்களின் ஊதிய விகிதத்தில் 301 தினக்கூலி தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்து பணி மேற்கொள்ள அனுமதி கோரியதில், நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் **K.Dis.No.3253/P3/2017** நாள் 24.03.2017 செயல்முறை ஆணையில் மூன்றாண்டுகளுக்கு பணி மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.<br><br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவிற்கிணங்க இந்நகராட்சி தூய்மைப்பணி மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கிரீன் வாரியர், திருவள்ளூர், சென்னை என்ற நிறவனத்திற்கு 15.05.2018 முதல் பணி மேற்கொள்ள உத்தரவிடப்பட்டு ஒவ்வொறு ஆண்டும் பணி நீட்டிப்பு செய்யப்பட்டு அந்நிறுவனத்தின் பணிக்காலம் 14.06.2021 உடன் முடிவடைகிறது.<br><br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவின்படி ஒப்பந்த அடிப்படையிலான பணிக்காலம் மூன்றாண்டுகள் நிறைவடைவதால் புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி கோரி கருத்துரு சமர்பிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவு வரும் வரை ஆகஸ்ட் மாதம் 14 ஆம் தேதி வரை இரண்டு மாதங்களுக்கு ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரர் கிரீன் வாரியர், திருவள்ளூர் என்ற நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1661/2021/எச்1) | **தீர்மானம் எண். 186 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | | |
| 16 | இந்நகராட்சியின் பொது சுகாதாரம் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளில் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC Workers) 120 நபர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக பணிபுரிந்து வந்தனர். இந்நிலையில் பணியின் போது விபத்துக்கள் அவர்களுக்கு அசம்பாவிதம் ஏதேனும் ஏற்பட்டால் அதற்கான இழப்பீடு நகராட்சியால் செலுத்த இயலாத நிலை உள்ளதாலும், மகளிர் சுய உதவி குழுக்களின் மூலம் பணிபுரியும் போது காப்பீடு, தொழிலாளர் நல நிதி உள்ளிட்ட சட்ட முறையை பின்பற்றுவதில் நடைமுறை சிக்கல் எழுவதாலும் நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களையும் தனியார் **(Out Sourcing)** மூலம் நிரப்ப மேற்கொள்ள வேண்டியதன் அடிப்படையிலும், அரசு முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் அவர்களின் 24.10.2017 ஆம் தேதிய ஆய்வுக் கூட்ட அறிவுறுத்தலின்படி, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.13433/201.8/ஜே1 நாள் 17.09.2018ல் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி நிர்வாக அனுமதி வரம்பிற்கு உட்பட்டு டெங்கு காய்ச்சல் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை தனியார் மூலம் பணியமர்த்தி கொள்ளுமாறு அனுமதி அளிக்கப்பட்டதின் அடிப்படையிலும் இந்நகராட்சியின் 120 டெங்கு காய்யச்சல் தடுப்பு பணிகளில் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை தனியார் மூலம் பணியமர்த்திக்கொள்ள மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 18.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி M/s HMS என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.10.2020 முதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது அவர்களின் பணிக்காலம் 11.06.2021 உடன் முடிவடைவதாலும் கொரோனா நோய் தொற்று பரவி வரும் காலம் என்பதாலும் ஒப்பந்தப்புள்ளி கோரி அதனை நடைமுறைப்படுத்துவதற்கு கால அவகாசம் தேவை என்பதாலும், 11.06.2021 முதல் 11.08.2021 வரை இரண்டு மாதங்களுக்கு மட்டும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி டெங்கு நோய் தடுப்பு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட நிறுவனத்தாரின் 18.09.2020 நாளது ஒப்பந்தபுள்ளி அடிப்படையிலேயே மேலும் இரண்டு மாத காலத்திற்கு M/s HMS என்ற நிறுவனத்திற்கே பணி நீட்டிப்பு வழங்கி ரூ.22.66 இலட்சம் செலவினத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி M/s HMS ஜெயங்கெண்டம் என்ற நிறுவனத்திற்கு இரண்டு மாதம் மட்டும் நீட்டிப்பு செய்து 11.06.2021 முதல் 11.08.2021 வரை பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதி மற்றும் திடக்கழிவு மேலாண்மை பயனர் கட்டண நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.2692/2016/எச்1) | **தீர்மானம் எண். 187 அனுமதிக்கப்பட்டது.** |
| 17 | **இந்நகராட்சியின் 2019-2020ம் ஆண்டு கணக்கினை பட்டய கணக்காளர்** Chartered Accountant | **தீர்மானம் எண். 188** |

<table>
<tr><td></td><td>மூலம் தயாரிக்கப்பட்டு உள்ளாட்சி நிதித் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டது. உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையினரால், தணிக்கை செய்யப்பட்டு தணிக்கை அறிக்கை பெறப்பட்டது. மேலும், 2018-2019 ஆண்டுக்கான கணக்கினை முடித்து கொடுத்தமைக்கு பட்டய கணக்காளருக்கு ரூ.60,000/- வழங்கப்பட்டுள்ளது. எனவே, அதன் அடிப்படையில் 2019-2020 ஆண்டு கணக்கு தயாரித்து கீழ்கண்டுள்ள பணியினை செய்தமைக்கு திரு.ஆர்.முனுசாமி, பட்டய கணக்காளர் அவர்களுக்கு கட்டணம் ரூ.60,000/- வழங்குவதற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.
<table>
<tr><th>S.No</th><th>Description</th></tr>
<tr><td>1</td><td>Complzen and Data Entry Work For Journal Book For The Annual Account</td></tr>
<tr><td>2</td><td>Complzen and Data Entry Work For General Ledger For The Annual Account</td></tr>
<tr><td>3</td><td>Preparation Of Trail Balance, Balance Sheet Data Entry And Printout Charges For Year 2019-2020</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு :<br>
1. அனுமதி வழங்கலாம்<br>
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடாலம்.<br>
(ந.க.எண்.1137/2021/பி2)</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>18</td><td>இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் ஆண்டு பராமரித்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதை எதிர்த்து திரு.K.ஏழுமலை என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார் (W.P.No.7642 / 2020) இவ்வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கு நடத்தும் M/s.லூர்துபவுல் மவுரியா, வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் ரூ.15,000/– செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு :<br>
1. அனுமதி வழங்கலாம்.<br>
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழக்கு கட்டணம் செலுத்தியதையும் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மானம் எண். 189<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

**19**

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம், சென்னை (Tamilnadu urban Finance and Infrastructure Development Corporation Limited, Chennai) அவர்களின் கடிதம் எண்.TUFIDCO/Nirbhaya Fund/915/AM(B)/2019 நாள் 26.04.2021ன்படி, அம்ரூத் திட்டம் செயல்படுத்தியுள்ள நகராட்சிகள் நிர்பயா திட்டத்தின் கீழ் புதியதாக மின்விளக்குகள் அமைப்பதற்கு ரூ.20.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, இந்நகராட்சியில் மேற்கண்ட திட்டத்தின் நெறிமுறை விதிகளின்படி கீழ்காணும் பகுதிகளில் நகர் வளர்ச்சிகாகவும், பெண்களின் பாதுகாப்பு நலனை கருத்தில் கொண்டும் தெருவிளக்குகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

**<u>பணியின் பெயர்</u>**

| **வ.எண்.** | **பணியின் பெயர்** | **விளக்குகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | இந்நகராட்சியின் 150W LED மின்விளக்குகள் சப்ளை செய்து பொருத்துதல். | |
| | வார்டு எண்.1 ஈசான்யம், அவலூர்பேட்டை சாலையில் | 10 |
| | வார்டு எண்.32 மணலூர்பேட்டை சாலையில் | 20 |
| | **150W LED மின்விளக்குகள்** | **30** |
| 2 | இந்நகராட்சியின் 48W LED மின்விளக்குகள் சப்ளை செய்து பொருத்துதல். | |
| | வார்டு எண்.17 பல்லவன் நகர் | 20 |
| | வார்டு எண்.17 கிருஷ்ணா நகர் | 10 |
| | வார்டு எண்.18 பெருமாள் நகர் | 12 |
| | வார்டு எண்.26 RS நகர் | 15 |
| | வார்டு எண்.26 மகா சக்தி நகர் | 20 |
| | வார்டு எண்.26 பெரும்பாக்கம் சாலை | 24 |
| | வார்டு எண்.27 தேனிமலை | 30 |
| | வார்டு எண்.33 சூர்யா நகர் | 10 |
| | வார்டு எண்.31 மாரியம்மன் கோவில் 3வது தெரு | 5 |
| | வார்டு எண்.39 ஜீவா நகர், வேட்டவலம் சாலை | 10 |
| | வார்டு எண்.36 ஆசிரியர் நகர் | 6 |

**தீர்மானம் எண். 190 அனுமதிக்கப்பட்டது.**

| | | |
|---|---|---|
| | வார்டு எண்.32 தூய்மை பணியார் குடியிருப்பு வளாகம் | 10 |
| | வார்டு எண்.9 ஆணைக்கட்டித்தெரு | 3 |
| | வார்டு எண்.9 காமாட்சியம்மன் கோவில் தெரு | 3 |
| | வார்டு எண்.9 தென்ஒத்தவாடை தெரு | 5 |
| | வார்டு எண்.9 திருமஞ்சன கோபுர தெரு | 4 |
| | வார்டு எண்.23 சிவன்படத்தெரு | 4 |
| | வார்டு எண்.23 தென்மாத்தாதி தெரு | 3 |
| | வார்டு எண்.23 அசலியம்மன் கோவில் தெரு | 3 |
| | **48 W LED மின்விளக்குகள்** | **197** |

மேற்படி ரூ.20.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட பிரேரணையை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம்.

(**ந.க.எண்**.1780/2021/இ1)

**ஆணையாளர்,**
**திருவண்ணாமலை நகராட்சி.**

# திருவண்ணாமலை நகராட்சி

## உள்ளூர் திட்டக் குழும கூட்டப் பொருள்

**21.06.2021 ந் தேதி திங்கட் கிழமை மாலை 5.30 மணிக்கு திருவண்ணாமலை நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நடைபெற்ற உள்ளூர் திட்டக் குழும கூட்டப் பொருள் விபரம்.**

| பொருள் எண். | பொருள் விபரம் | குறிப்பு |
|---|---|---|
| 1 | திருவண்ணாமலை நகர பகுதி தனித்த உள்ளூர் திட்ட குழுமம் ஆக செயல்பட்டு வருகின்றது. நகராட்சி பகுதியினை ஒட்டி வளர்ச்சியடைந்துள்ள கிராம பகுதிகளை இணைத்து கூட்டு உள்ளூர் திட்ட குழும பகுதியாக நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 10(1)ன் கீழ் அறிவிப்பு செய்திட ஏதுவாக அதற்கான உத்தேச வடிவினை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவண்ணாமலை அவர்களின் கடிதம் ந.க.எண்.1139/2021/தி.மலை, நாள்: 15.06.2021 குழுமத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>திருவண்ணாமலை நகர பகுதியினை ஒட்டி வளர்ச்சியடைந்து வரும் 12 கிராமங்களை உள்ளடக்கி கூட்டு உள்ளூர் திட்ட குழும பகுதியாக செயல்பட அனுமதிக்கலாம். கிராம பகுதிகள் (1) வேங்கிக்கால் (2) நொச்சிமலை (3) கீழ்நாத்தூர் (4) மேலத்திகான் (5) கீழ்அனைக்கரை (6) நல்லவன் பாளையம் (7) சமுத்திரம் (8) ஆனாய் பிறந்தான் (9) அத்தியந்தல் (10) அடிஅண்ணாமலை (11) சேரியந்தல் (12) திருவண்ணாமலை கிராமம் (13) வட ஆண்டாபட்டு.<br>**(ந.க.எண்.1832 / 2021 / எப்1)** | **தீர்மானம் எண். 14 அனுமதிக்கப்பட்டது.** |

**ஆணையாளர்,**
**திருவண்ணாமலை நகராட்சி.**